9th August 1965]

வேறு மாநிலத்திற்கு மாற்றவேண்டும் என்று கூறுகின்ற யோசனை சரியான யோசனை அல்ல என்பதை கனம் அங்கத்தினர் ஏற்றுக் கொள்வார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஷேக் அப்துல்லாவை மலைப்பிரதேசத்தில் வைப்பதால் போலீஸ் பந்தோபஸ்துக்காக ஒவ்வொரு நாளும் போலீஸ்காரர்கள், மேல் உத்தியோகஸ்தர்கள், கலெக்டர் இவர்கள் எல்லாம் அங்கே போக வேண்டி இருக்கிறது. இதற்கு அவர்களுக்கு ஆகக்கூடிய வாகனச் செலவுகளை யார் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்? இதையெல்லாம் ஏன் நம் மாநிலம் செலவு செய்ய வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நம் மாநிலம் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நமது மாநிலத்திற்கு அகில இந்திய பாதுகாப்பில் அக்கறை இருக்கிறது. ஆதலால் இதற்காக நாம் செலவு செய்தாலும் பாதகம் இல்லை என்று கருதுகிறேன்.

குண்டர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல்

*126 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குண்டர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

'நாம் தமிழர்' தொண்டர்கள் கைது

*127 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சேலம் மாவட்டத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்ததை யொட்டி 'நாம் தமிழர்' தொண்டர்களைக் கைது செய்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes. Some persons belonging to this party were arrested during the President's visit to Salem, as it was feared that their proposed black flag demonstration would disturb public order. They were released soon after the President left Salem.

திரு. ஜே. மாதா கவுடர் : அவர்கள் எதற்காகக் கருப்புக் கொடி காண்பித்தார்கள்? அவர்களுடைய கோரிக்கைகள் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஏதோ சேலம் உருக்காலை பற்றி ஜனாதிபதி முன்பு ஆர்பாட்டம் செய்ய வேண்டும் என்று ஆரம்பித்தார்கள். ஆர்பாட்டம் செய்தால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற காரணத்திற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.